குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No. 364/2025**

வழக்கு சாட்சி ம.சா.1

2026ம் ஜூலை மாதம் 07 –ம் நாள் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| பெயர் | அரவிந்த் | தொழில் | |
|---|---|---|---|
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**(Accused absent. Filed petition and allowed).**

நாள்: 07 .07.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சண்முகராஜ் எனக்கு எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் எதிரி அறிமுகப்படுத்தியதன் மூலம் எனக்கு பழக்கம் ஆகும். சண்முகராஜ் சித்தோட்டில் லலிதாம்பிகை என்ற பெயரில் டெக்ஸ்டைல்ஸ் ப்ராசஸ் வைத்துள்ளார் என்றால் பெயர் தெரியாது. எதிரியும் சண்முகராஜ்ம் நண்பர்களா என்றால் தெரியாது எதிரிக்கும் சண்முகராஜுக்கும் என்ன சம்பந்தம் என்று சொன்னால் நான் எதற்காக சண்முகராஜ் பார்க்க சென்றேன் என்றால் சண்முகராஜ் நடத்தி வந்த டையிங் கம்பெனியை எதிரி லீசுக்கு எடுப்பதற்காக சென்றிருந்தார் அதன் மூலம் எனக்கு பழக்கம். நானும் அந்த கம்பெனியை பார்ட்னர்ஷிப் மூலமாக எடுப்பதற்காக சென்றேன் என்றால் எனக்கு தனியாக கம்பெனி உள்ளது. நான் சண்முகராஜுக்கு ரூபாய் 5 லட்சம் பணம் அனுப்பியது குறித்து இந்த வழக்கில் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். அந்தத் தொகை எனக்கு எவ்வாறு வந்தது என்று குறிப்பிட்டு என் வழக்கில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொல்லியுள்ளேன். அந்த ஐந்து லட்சம் தொகையில் ரூ. 2.5 லட்சம் என்னுடைய கணக்குக்கு வந்துவிட்டது என்று சொன்னால் காசோலையாக கொடுத்தார். எந்த தேதி எந்த வருடம் எனக்கு கொடுத்தார் என்றால் பிப்ரவரி 2024 ஆம் வருடம் கொடுத்தார் தேதி ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக லலிதாம்பிகை டெக்ஸ்டைல்ஸ் ப்ராசஸ் நிறுவனத்தின் சண்முகராஜ் என்பவரை விசாரிக்க எனக்கு ஆட்சேபனை உண்டா என்றால் இல்லை. எனக்கும் சண்முகராஜ் என்பவர் நேரடியாக எந்த வரவு செலவு என்றால் சரியல்ல. ரூபாய் 5 லட்சம் நான் கொடுத்ததையும் ரூபாய் இரண்டரை லட்சம் எனக்கு திரும்பி வந்தது குறித்தும் என்னுடைய வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் காட்டியுள்ளேன். அந்த வருமானவரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை உண்டா என்றால் இல்லை. அந்த வருமானவரி கணக்கை அந்த நிதியாண்டில் தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை உண்டா என்றால் இல்லை. உண்மையில் எனக்கும் சண்முகராஜ் என்பவருக்கும் தான் வரவு செலவு என்றும் எதிரிக்கும்

சண்முகராஜுக்கும் வரவு செலவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக அவர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை தொகையை ரூபாய் 12,50,000/- ரொக்கமாக பெற்றுக்கொண்டு பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. எதிரி எனக்கு Gpay மூலமாக பணப்பரிவினை செய்துள்ளார் என்று சொன்னால் சரியில்ல நான் தான் அவருக்கு பணம் அனுப்பி உள்ளேன். நான் அவருக்கு பணம் ரூ.5000/- அனுப்பியது குறித்து எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ புகாரிலோ சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மருத்துவ செலவுக்காக கேட்டார்கொடுத்தேன். வழக்கு சம்பந்தப்படட தொகை வழங்கப்பட்டதற்கு பின்னிட்டு ரூபாய் 5000 எதிரியின் நான் அனுப்பியுள்ளேன். வழக்கு காசோலை ரூ.12,50,000/- வாங்கிக்கொண்டுதான் ரூ.5000/- அனுப்பினேன் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் ஆகிய தொகையை எதிரி திருப்பி செலுத்தி விட்டார் என்றும் நான் சண்முகராஜா பழிவாங்குவதற்காக எதிரி மீது இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் எனக்கும் சண்முகராஜுக்கும் தான் வரவு செலவு என்றும் அவரிடம் வசூல் செய்ய முடியாது என்பதற்காக சண்முகராஜா பழிவாங்குவதற்காக எதிரி மிகுந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.